மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்.

**RLTOP No.62/2023**

**PW 1**

இந்நீதிமன்றத்தில் G.III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அபிராமி | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

RLTOP (Tamil Nadu Buildings Regulation of Rights and Responsibilities of Landlords and Tenants Act 2017 Sec.36 in கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்நீதிமன்றம் RLTOP. /2023 வழக்கின் விசாரணை குறித்து முடிவெடுக்க O.X.R.1 and 2 Cpc போன்ற தரப்பினரது விசாரணை)

**மனுதாரர் விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தையே எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்களை

என் தரப்பில் குறியீடு செய்ய கோருகிறேன். 01.5.2019 தேதியிட்ட மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இடையேஏற்படுத்திக்கொண்ட பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்த பத்திரம் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.3.2022 தேதியன்று மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பின் கையிருப்பு பிரதி **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.3.2022தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட ரூ,48,000 த்திற்கான எண்,000058 கொண்ட அசல் காசோலை **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காசோலையை மனுதாரர் சிட்டி யூனியன் வங்கியில் 31.3.2022 தேதியன்று செலுத்தப்பட்டு அவை 2.4.2022 தேதியன்று திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.5.2022 தேதியன்று மனுதாரரால் பள்ளிக்கரணை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கான மனு ஏற்பு ரசீது எண்.1265/2022 எண்கொண்ட மனு ஏற்பு ரசீது மற்றும் புகார் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரரால் ஆலந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் பிராது **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.11.2022 தேதியன்றுமனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய சட்டஅறிவிப்பு மற்றும் திருப்பப்பட்ட கவர் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரருடைய வங்கி கணக்கு பட்டியல் கணிணி பிரதி **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

**1) மனு சொத்து தொடர்பாக புதிய வாடகை சட்டம் 22.2.2019 நடைமுறைக்கு வந்த பிறகு எதிர் மனுதாரரோடு எழுத்துப்பூர்வமான வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி இருக்கிறீர்களா?**

இல்லை.ஏற்படுத்தவில்லை.

**2) ஏன் எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை?**

எதிர் மனுதாரர் முன் வராததால் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தி பதிவு செய்யப்படவில்லை.

**3) இந்த வழக்கை பற்றி வேறு ஏதேனும் சொல்ல வேண்டுமா?**

மனு சொத்தில் எதிர்மனுதாரர் வாடகை பணம் செலுத்தி வராமலும், காலி செய்து

வராமலும் இருந்து வருகிறார்கள். எனவே மனுசொத்தில் இருந்து எதிர்மனுதாரரை காலி செய்திட உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.